# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2016

| தரம் : 11 | சைவசமயம் | நேரம் : 3.00 மணி |
|---|---|---|
| | பெயர் / சுட்டெண் ............................................ | |

## பகுதி - I

✷ பின்வரும் வினாக்களுக்குரிய சரியானதும், மிகப் பொருத்தமானதுமான விடையைத் தெரிவுசெய்க.

01. பெருங்கதை விரதத்திற்குரிய கடவுளாக விளங்குபவர்
1. சிவபெருமான் 2. விநாயகர் 3. வைரவர் 4. விஷ்ணு

02. இந்து சமயத்தின் முதல் நூல்
1. வேதம் 2. ஆகமம் 3. புராணம் 4. இதிகாசம்

03. இறைவனின் ஐந்தொழில் தத்துவத்தை விளக்கும் வடிவம்
1. சோமஸ்கந்தர் 2. தட்சணாமூர்த்தி 3. அர்த்தநாரீஸ்வரர் 4. நடராஜர்

04. தட்சணாயன காலம் எனப்படுவது
1. தை 1 தொடக்கம் ஆடி 31 வரை
2. ஆடி 1 தொடக்கம் மார்கழி 31 வரை
3. தை 1 தொடக்கம் ஆனி 30 வரை
4. ஆனி 1 தொடக்கம் மார்கழி 31 வரை

05. கோயில்களில் புராணபடனம் செய்வதை சமயப் பிரசாரம் முறையாகப் பயன்படுத்தியவர்
1. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
2. சுவாமி விபுலானந்தனர்
3. சேர்.பொன்.இராமநாதன்
4. சபாபதி நாவலர்

06. கார்த்திகை மாத தேய்பிறை பிரதமை தொடக்கம் மார்கழி மாத வளர்பிறை சஷ்டி வரை உள்ள நாட்களில் அனுஷ்டிக்கப்படும் விரதம்
1. கந்தசஷ்டி 2. விநாயக சஷ்டி 3. கேதாரகௌரி விரதம் 4. நவராத்திரி

07. தீபாவளிப் பண்டிகையுடன் தொடர்புபட்ட அசுரன்
1. மகிடாசுரன் 2. சூரபத்மன் 3. நரகாசுரன் 4. கம்சன்

08. சைவசமயிகள் முதலில் பெற்றுக்கொள்ளும் தீட்சை
1. விசேட தீட்சை 2. நிர்வாண தீட்சை 3. மானச தீட்சை 4. சமய தீட்சை

09. ஓசை கொடுத்த நாயகி வீற்றிருக்கும் தலம்
1. சிதம்பரம் 2. திருவாரூர் 3. திருப்பைஞ்ஞீலி 4. திருக்கோலக்கா

10. ஆறுமுகநாவலருக்கு "நாவலர்" என்னும் பட்டத்தை வழங்கி கௌரவித்த நிறுவனம்
1. திருஞானசம்பந்தர் ஆதீனம்
2. திருப்பனந்தாள் ஆதீனம்
3. திருவாவடுதுறை ஆதீனம்
4. திருப்பெருந்துறை ஆதீனம்

11. மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை பாடியவர்
1. நம்பியாண்டார் நம்பி
2. கபிலதேவர்
3. காரைக்காலம்மையார்
4. திருவாலவாயுடையார்

12. இந்துக்களின் திருமணச் சடங்கின் போது இடம்பெறும் பாணிக்கிரகணம் என்பது
1. மோதிரம் எடுத்தல்
2. காப்புக் கட்டல்
3. கைப்பிடித்தல்
4. ஏழடி வைத்து நடத்தல்

13. சின்னக் கதிர்காமம் என அழைக்கப்படும் தலம்
1. மண்டூர் முருகன் ஆலயம்
2. நல்லூர் முருகன் ஆலயம்
2. செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்
4. இணுவில் கந்தசுவாமி ஆலயம்

14. “சுண்ணவெண் சந்தனச் சாந்தும்......” என்னும் பதிகத்தை நாவுக்கரசர் பாடிய சந்தர்ப்பம்
   1. கல்லோடு கட்டி கடலில் வீசிய போது
   2. மதம் கொண்ட யானையை ஏவிய போது
   3. நஞ்சு கலந்த பாற்சோற்றைக் கொடுத்த போது
   4. நீற்றறையில் அடைத்த போது

15. இராமன் இராவணனை அழித்தமையால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷம் முழுமையாக நீங்கிய தலம்
   1. திருக்கேதீச்சரம்
   2. திருக்கோணேச்சரம்
   3. முன்னேச்சரம்
   4. நகுலேஸ்வரம்

16. சைவபரிபாலன சபை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
   1. 1889
   2. 1888
   3. 1822
   4. 1828

17. திருக்கேதீச்சர ஆலயத்தின் மீது பதிகம் பாடிய நாயன்மார்கள்
   1. திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார்
   2. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர்
   3. திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார்
   4. திருநாவுக்கரசு நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள்

18. நாலாயிர திவ்விய பிரபந்தங்களைத் தொகுத்தவர்
   1. நம்பியாண்டார்நம்பி
   2. ஸ்ரீமத்நாத முனிவர்
   3. ராமானுஜர்
   4. குலசேகர ஆழ்வார்

19. அருணந்தி சிவாச்சாரியாரின் குரு
   1. பரஞ்சோதி முனிவர்
   2. மறைஞான சம்பந்தர்
   3. மனவாசகம் கடந்தார்
   4. மெய்கண்டதேவர்

20. கடல் நீரில் விளக்கேற்றப்படும் ஆலயம்
   1. காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயம்
   2. வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்
   3. மந்திகை கண்ணகி அம்மன் ஆலயம்
   4. மட்டுவில் கண்ணகி அம்மன் ஆலயம்

21. தன் மாத்திரைகள் எனப்படுபவை
   1. மெய், வாய், கண், மூக்கு, செவி
   2. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
   3. நிலம், தீ, நீர், காற்று, ஆகாயம்
   4. மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

22. “திகட சக்கர.....” என்ற காப்புச் செய்யுளுடன் ஆரம்பமாகும் சைவ இலக்கிய நூல்
   1. கந்தபுராணம்
   2. பெரியபுராணம்
   3. சிவபுராணம்
   4. திருவிளையாடற் புராணம்

23. ஆலயத்தில் உள்ள கொடிமரம், கொடிச்சீலை, கயிறு என்பன முறையே குறித்து நிற்பவை
   1. ஆணவம், கன்மம், மாயை
   2. இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானாசக்தி
   3. பதி, பசு, பாசம்
   4. அருவம், உருவம், அருவுருவம்

24. குரு சீடனுடைய தலையில் தமது கையை வைத்து மாயா மலத்தை கெடுக்கும் தீட்சை
   1. நயன தீட்சை
   2. வாசக தீட்சை
   3. யோக தீட்சை
   4. பரிச தீட்சை

25. சூரபன்மனால் சிறை வைக்கப்பட்ட தேவர்களை மீட்கச் சென்றவர்
   1. வீரவாகுதேவர்
   2. கபிலதேவர்
   3. சயந்தன்
   4. இந்திரன்

26. “அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்” இதிலிருந்து நாம் அறிந்து கொள்ளும் உண்மை
   1. அன்பு வேறு, சிவம் வேறு என்பதை
   2. அன்பிற்கும், சிவத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதை
   3. அன்பே சிவம் என்பதை
   4. வேதாந்தம், சித்தாந்தம் இரண்டும் ஒன்றே என்பதை

27. தானாகவே தோன்றிய இலிங்கம்
   1. பரார்த்த லிங்கம்
   2. இட்டலிங்கம்
   3. சுயம்புலிங்கம்
   4. பஞ்சலிங்கம்

28. இலங்கையை சிவபூமி என அழைத்தவர்
   1. திருஞானசம்பந்தர்
   2. திருமூலர்
   3. விவேகானந்தர்
   4. ஆறுமுகநாவலர்

29. இறைவன் விருப்பு, வெறுப்பு அற்றவன் என்பதைக் குறிப்பது
   1. சங்கரன்
   2. பரம்பொருள்
   3. சலமிலன்
   4. பசுபதி

30. சங்கம வழிபாட்டால் முத்தியடைந்த நாயன்மார்
   1. குலச்சிறையார், அப்பூதியடிகள்
   2. பூசலார், சாக்கிய நாயனார்
   3. சேரமான் பெருமாள், மங்கையற்கரசியார்
   4. சிறுதொண்டர், இளையான்குடிமாற நாயனார்

31. சுந்தரமூர்த்தி சுவாமிகள் முத்தியடைந்த தினம்
1. சித்திரைச் சதயம் 2. வைகாசி மூலம் 3. ஆடிச்சுவாதி 4. ஆனி மகம்

32. "சைவநெறிக்கு சமய நோக்குடன் சமூக நோக்கும் உண்டு" என்பதை உணர்த்தும் மகுடவாசகம்
1. "திக்கற்றவர்க்கு தெய்வமே துணை" 2. "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்"
3. "மெய்ப்பொருள் காண்பது அறிவு" 3. "மக்கள் சேவையே மகேசன் சேவை"

33. இணுவில் கந்தசுவாமி ஆலயத்தின் தலவிருட்சம்
1. வன்னி மரம் 2. நொச்சி மரம் 3. மாதுளை மரம் 4. கல்லால மரம்

34. ஒருவர் இறந்த பின் அன்னாரின் ஆன்மா பாசங்களில் நின்று நீங்கி சிவத்துவம் அடைய வேண்டி செய்யப்படும் கிரியைகள்
1. பூர்வக்கிரியை 2. அபரக்கிரியை 3. நித்திய கிரியை 4. காமிய கிரியை

35. திருமுறைப்பாடல்களைப் பாடிய பெண் அடியார்
1. காரைக்காலம்மையார் 2. ஔவையார் 3. மங்கையற்கரசியார் 4. மாதுமையார்

36. முருகனின் கையிலுள்ள வேல் இறைவனின்
1. இச்சா சக்தி 2. ஞான சக்தி 3. கிரியா சக்தி 4. அர்ந்த சக்தி

37.

| | | | |
|---|---|---|---|
| A தடத்தநிலை | B சிவஞான சித்தியார் | C சக்தி | D விந்து |
| E சிவம் | F மெய்கண்டதேவர் | G அருணந்தி சிவாச்சாரியார் | H சொரூபநிலை |
| I பிரமா | J உருத்திரன் | K நாதம் | L சிவஞானபோதம் |

**மேல்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி 37ம், 38ம், 39ம் வினாக்களுக்கு விடை தருக.**

37. கடவுளின் இரு நிலைகளுடனும் தொடர்புடைய தொகுதி
1. A, B 2. A, G 3. A, H 4. E, K

38. அருவத் திருமேனியை உள்ளடக்கியது
1. E, C, K, D 2. E, D, J, I 3. I, C, J, K 4. K, E, D, I

39. சைவ சித்தாந்தத்தின் முதல் நூல், வழிநூல் அவற்றை ஆக்கியவர்களின் பெயர்
1. A, B, L, J 2. F, L, D, C 3. L, B, F, G 4. H, L, G, F

40. சைவசமயியின் இறுதி இலட்சியம்
1. முத்தியின்பம் பெறல் 2. செல்வம் திரட்டல்
3. உண்டு உடுத்து வாழுதல் 4. உலக இன்பத்தை அனுபவித்தல்

## பகுதி - II

**முதலாம் வினாவும் இரண்டாம் வினாவும் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

01. 1. மனித நேயப் பண்புகள் நான்கு தருக.
2. ஆலயங்களில் இடம்பெறும் நைமித்திய கிரியைகள் நான்கைக் குறிப்பிடுக.
3. பஞ்சபூதங்கள் யாவை?
4. விழுமியம் என்றால் என்ன?
5. "கொற்றவன்குடி முதலியார்" என அழைக்கப்படும் சந்தானகுரவர் யார்?
6. சுவாமி விபுலானந்தரின் பிரம்மச்சரிய நாமம் யாது?
7. அருணகிரிநாதர் கிளி வடிவில் இருந்து பாடிய நூல்களைத் தருக.
8. கண்ணகி அம்மன் வழிபாட்டை இலங்கைக்குக் கொண்டு வந்த மன்னன் யார்?
9. ஆகந்துவ மலங்கள் என அழைக்கப்படும் மலங்கள் எவை?
10. "பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி" இதில் பூழியர்கோன், புகலியர்கோன் எனக் குறிப்பிடப்படுபவர்கள் யாவர்? (10 x 2 = 20 புள்ளிகள்)

02. 1. பின்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.
2. அவற்றின் பொழிப்புரையை எழுதுக.

அ. "உற்றுமை சேர்வது மெய்யினையே......"
ஆ. "நாமார்க்குங் குடியல்லோம் நமனை..........."
இ. "பால் நினைந் தூட்டுந் தாயினும்.........."
ஈ. "உம்பர் தரு தேனுமணி..........."
உ. "தனந் தரும் கல்வி தரும்.........." (3 + 2 x 2 = 10 புள்ளிகள்)

03. "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்"
1. சைவசமயிகள் தினமும் ஈடுபட வேண்டிய சமயக் கடமைகள் ஐந்து எழுதுக.
2. பாடசாலையில் சமய விழாக்களைக் கொண்டாடுவதனால் ஏற்படும் நன்மைகள் நான்கு தருக.
3. திருக்கோயில் வழிபாட்டின் அவசியத்தை உணர்த்தும் முதுமொழிகள் மூன்றைக் குறிப்பிடுக.
4. பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நிகழும் நைமித்திய கிரியைகள் இரண்டு தருக.

(2 + 3 + 3 + 2 = 10 புள்ளிகள்)

04. "நால்வர் காட்டிய நல்வழியைக் கடைப்பிடிப்போம்"
1. நாயன்மார் நால்வரும் கடைப்பிடித்த மார்க்கங்களைக் குறிப்பிடுக.
2. சமகாலத்தில் வாழ்ந்த சமயக்குரவர்கள் இருவரைக் குறிப்பிட்டு இருவரும் இணைந்து செய்த அற்புதங்கள் இரண்டினைத் தருக. அப்போது பாடிய பதிகங்கள் எவை?
3. சுந்தரர் செய்த அற்புதங்கள் மூன்றைத் தந்து அப்போது பாடிய பதிகங்களைத் தருக.
4. மாணிக்கவாசகர் பாடிய நூல்களைக் குறிப்பிடுக. அவற்றுள் ஒன்றின் சிறப்பைத் தருக.

(2 + 3 + 3 + 2 = 10 புள்ளிகள்)

05. "சைவ சித்தாந்த வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் சந்தான குரவர்கள்"
1. அகச்சந்தான குரவர்களையும், புறச்சந்தானக் குரவர்களையும் வகைப்படுத்தித் தருக.
2. மெய்கண்ட சாஸ்திர நூல்களில் சித்தாந்த அட்டகம் எனப்படுவது யாது? அவற்றுள் நான்கின் பெயர் தருக.
3. மூவகை ஆன்மாக்களைக் குறிப்பிடுக?
4. 'ஆணவ மலத்தின் மறுபெயர்கள் இரண்டைக் குறிப்பிடுக.
5. திருவருட்பயன் அதிகாரங்கள் எத்தனை? அவற்றுள் இரண்டு அதிகாரங்களின் பெயர் தருக.

(4 + 2+ 2 + 2 = 10 புள்ளிகள்)

06. மாசிலாத மணிதிகழ் மேனி மேல்
பூசுநீறுபோல் உள்ளமும் புனிதர்கள்
தேசினால் எத்திசையும் விளங்கினார்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்

1. மேற்குறிப்பிட்ட பாடல் இடம்பெறும் நூல் எது? அதனைப் பாடியவர்கள் யார்? எத்தனை பாடல்கள் உள்ளன?
2. இந்நூலில் யாருடைய பெருமை கூறப்படுகிறது?
3. நீர் சிவபெருமானுக்கும் சிவனடியார்களுக்கும் செய்த தொண்டுகள் சிலவற்றை எழுதுக.
4. மேற்குறிப்பிட்ட பாடலில் கூறப்படும் விடயத்தை உமது நடையில் எழுதுக.

(2 + 2 + 2+ 4= 10 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்புரைகள் எழுதுக.
அ. நயினை நாகபூசணி அம்மன் ஆலயம்
ஆ. சுவாமி விபுலானந்தர்
இ. திருக்கார்த்திகை விளக்கீடு
ஈ. கந்தபுராணம்
உ. நாட்டார் தெய்வ வழிபாடு (5 x 2 = 10 புள்ளிகள்)